Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 31

சனிக்கிழமை
27 டிசெம்பர் 2025

மார்கழி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



முச்சந்தி முரளி

"ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எண்டதை பேசாமல் குரைப்புக்குழுக் கூட்டம் எண்டு பேரை மாத்தினால் சோலி இல்லைக் கண்டியளோ"

# டக்ளஸ் கைது!!



**கொழும்பு, டிசெம்பர் 27**

**ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதப் படுகொலை விசாரணைப் பிரிவினரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.** »11

## முன்னாள் தவிசாளர் 'பல்டி'; கரைதுறைப்பற்று பாதீடு வெற்றி!!

முல்லைத்தீவு, டிசெ. 27

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேசசபை யின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு, முன்னாள் தவிசாளரான தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த லோகேஸ்வரனின் ஆதரவளிப்பு மூலம் கிடைத்த மேலதிக ஒரு வாக்கால் நிறைவேறியது. »11

## நீக்கப்பட்டார் லோகேஸ்வரன்

யாழ்ப்பாணம், டிசெ.27

கட்சியின் கட்டுப்பாட்டை மீறியமைக்காக முல்லைத்தீவு,கரைதுறைப்பற்று பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் சி.லோகேஸ்வரனை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து தூக்கியெறிந்துள்ளது தமிழரசுக்கட்சி. கரைதுறைப்பற்று பிரதேச »11

ⓘபேய்ப்பயல் ⓘவிசரா! ⓘகுரங்கு! ⓘசெம்மறி! ⓘமடையன்
ⓘநாய்க்குட்டி!! ⓘகுடிகாரா!! ⓘபொத்தடா! ⓘமூடா!! ⓘபைத்தியம்

## காற்றில் பறந்த சபை நாகரிகம்

### குழப்பத்தில் முடிந்த யாழ். ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.27

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமக்கிடையே வசவு வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டதாலும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என்ற போர்வையில் வந்த தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் கூச்சல் குழப்பத்தாலும் வழக்கம்போல முடிவேதும் »11

## விபத்தில் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், டிசெ.27

சாவகச்சேரி - புத்தூர் வீதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மட்டுவில் கிழக்கைச் »06

16 வருடமாகப் படைவசமிருந்த

## 25 ஏக்கர் காணி விடுவிப்பு!

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி, பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நல்லூர்க் கிராம சேவையாளர் பிரிவில், கடந்த 16 ஆண்டுகளாக இராணுவத்தின் வசமிருந்த 25 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு விடுவிக்கப் »06



குடும்பஸ்தர் ஒருவரை

## எலிக்காய்ச்சல் பலியெடுத்தது!

### மந்திகை மருத்துவமனையில் சம்பவம்

வடமராட்சி, டிசெ.27

எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு பருத்தித்துறை (மந்திகை) ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துன்னாலை தெற்கு, வேம்படிப் பகுதியைச் சேர்ந்த சிங்கராஜா சிவராஜ »11

## தெல்லிப்பழை புற்றுநோய்ப்பிரிவை விசேட அலகாக மாற்றத் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ.27

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையோடு இணைந்து இயங்கிவரும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை விசேட தனியலகாக இயங்க வைப்பதென யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழை ஆதார மருத் »11

## கிணற்றுக்குள் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.27

உடுவில் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் கிணற்றில் இருந்து நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உடுவிலைச்சேர்ந்த ரெஜித் டிலாஸ் (வயது-40) என்பவரே இவ்வாறு சடலமாக »11

## நாளைமுதல் மழை!

யாழ்ப்பாணம், டிசெ.27

நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் ஜனவரி 6 ஆம் திகதி வரை வடக்கில் மீண்டும் மிதமானது முதல் கன மழை கிடைக்கும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா.

இதுதொடர்பில் அவர் நேற்று வெள்ளிக்கிழமை »11

## ஆழிப்பேரலை நினைவில் மூழ்கி அஞ்சலித்தது நாடு!



யாழ்ப்பாணம், டிசெ. 27

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 21ஆவது நினைவுதினமும், தேசியப் பாதுகாப்பு தினமும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடெங்கும் நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப் பேரலைப் பேரிடரில் சிக்கி, இலங்கைமுழுதும் சுமார் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், »11

(விரிவான செய்திகள், படங்கள் 02 ஆம் பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4297 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 03 08 50 71 |
| விசேட எழுத்து | H |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1364 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 35 57 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0323 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 7 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2403 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கங்கள் | 06 25 58 67 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6055 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 7 3 7 9 7 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2085 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 14 39 44 80 |
| விசேட எழுத்து | G |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0171 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 12 41 46 |




21ஆவது சுனாமி நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் நேற்று இடம்பெற்றது. மணற்காட்டில் சுனாமிப் பேரலையால் காவு கொள்ளப்பட்டவர்கள் புதைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (ச-100)



# முல்லைத்தீவில் ஆழிப்பேரலை நினைவு

முல்லைத்தீவு,டிசெ.27

கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு சுனாமி நினைவால யத்தில் நேற்று உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது. உயிரிழந்தவர்களின் உறவுகள் கதறி அழுது கண்ணீர் மல்க, தமது உயிரிழந்த உறவுகளுக்கு மலர்தூவி, தீபமேற்றி, உணவுப்பொருள்களைப் படையலிட்டு உணர்வு பூர்வமாக அஞ்சலிகளைச் செலுத்தினர். அதே வேளை உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி மதவழிபாடுகளும் இடம்பெற்றன. அஞ்சலி நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார். (ச-246)



21ஆவது சுனாமி நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி புலோலிப் பகுதியில் நேற்று இடம்பெற்றது. புலோலி கிராமக்கோட்டுப் பகுதியில் உள்ள நினைவிடத்தில் மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-100)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற சுன்னாகம் கதிரமலைச் சிவன்ஆலய மார்கழிமாதத் திருவெம்பாவை உற்சவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமானது.
தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் இடம்பெறும். (ச-41-66)

# சுனாமிப் பேரவலத்தின் நினைவு வவுனியாவில் உணர்வுபூர்வம்

வவுனியா,டிசெ.27

சுனாமி பேரவலத்தின் 21ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. பூந்தோட்டத்தில் அமைந்துள்ள இலங்கையின் முதலாவது சுனாமி நினைவாலயத்தில் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தின் ஏற்பாட்டில் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவினால் சுனாமிப் பேரவலத்தில் உயிர் நீத்தவர்களுக்கான அஞ்சலிச் சுடர் ஏற்றப்பட்டதோடு 'டித்வா' புயலினால் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலிச் சுடரினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் ஏற்றிவைத்திருந்தார். தொடர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவுத் தூபிக்கு மலர்மாலை சூட்டி மக்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். (ச-110)



| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0763 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 2 5 5 2 6 0 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3029 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 12 17 35 44 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 16 21 52 73 |
| வெற்றி வாரம் | 5190 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0859 |
| வெற்றி இலக்கம் | 05 11 41 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| | சிம்மம் |
| வெற்றி இலக்கம் | 12 34 41 57 |
| சீட்டிழுப்பு வாரம் | 4741 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கம் | 15 41 48 61 |
| வெற்றி வாரம் | 2205 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 26.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 01 19 74 75 |
| வெற்றி வாரம் | 2855 |

# சுனாமி நினைவேந்தல் மன்னாரில் கடைப்பிடிப்பு

மன்னாரில், டிசெ.27

சுனாமிப் பேரலையில் உயிரிழந்தவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மன்னார் பிரதான பாலத்தடியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கலங்கரை கலை இலக்கிய நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் அதன் இயக்குநர் ஏ.ரி. மேகன்ராஜ் தலைமையில் குறித்த நினைவேந்தல் இடம்பெற்றது. சுனாமியில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் குறித்த கடற்கரைப் பகுதியில் தீபம் ஏற்றி மலர் தூவி உயிர்நீத்தவர்களுக்காக உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நினைவேந்தல் நிகழ்வில் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் இணைந்து சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். இதேவேளை சுனாமி அனர்த்த நினைவேந்தல் நிகழ்வுகள் மன்னார் மாவட்டச் செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டன. மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் தலைமையில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. (ச-56)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரான நிவாரணப் பணிகள் இடம்பெறுவது உறுதியில்லை

விவசாய அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.27**
**இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கை 100 வீதம் சரியாக நடைபெறவில்லை என விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நிவாரணம் வழங்கும் சில விடயங்களில், 100 சதவீதம் முழுமையாகவே வேலை நடைபெறுகிறது எனத் தம்மால் கூற முடியாது. எனினும், இயற்கை அனர்த்த நிலைமை காரணமாக நாட்டில் உணவுத் தட்டுப்பாடு உருவாகும் அளவுக்கு எந்தவொரு கடுமையான பாதிப்பும் ஏற்படவில்லை. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 25,000 ரூபா வழங்கும் பணிகள் தற்போது நிறைவடையும் கட்டத்தில் உள்ளன. ஆனால் ரூ.50,000 நிவாரணத்தொகையை வழங்கும்போது சில சிக்கல்கள் எழலாம்; அது இயல்பான விடயமே. பொருள்கள் வழங்குவதற்கான 50,000 ரூபா நிவாரணத்தொகை தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. சிலருக்கு அந்தத் தொகையை வழங்கவேண்டுமா என்ற கேள்வியும் உருவாகின்றது. சிலர், அரச அதிகாரிகளுக்கு அனர்த்தம் ஏற்படவில்லை; தங்களுக்கு மட்டுமே அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்ற மனநிலையுடன் சிந்திக்கின்றனர். ஆனால், இந்தப் பாதிப்பு பொதுவாக அனைவரையும் பாதித்துள்ளது- என்றார். (ச-இ)

## டோக்கியோவில் இலங்கையர் கைது

கொழும்பு, டிசெ.27
ஜப்பானின் டோக்கியோ நகரில் புகையிரத நிலையத்துக்கு அருகில் இலங்கையர் ஒருவர் கூர்மையான ஆயுதம் ஒன்றினால் தனது கழுத்தை அறுக்க முற்பட்டபோது கைதுசெய்யப்பட்டுள்ளார். அப்பகுதிக்கு வருகைதந்த சுமார் பத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளனர். கைகள் மற்றும் கழுத்துப் பகுதியில் காயங்களுடன் மயக்க நிலையில் இருந்த குறித்த இலங்கையர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதுடன் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ச-இ

## கிழக்கு மாகாணத்துக்கு ரயில் சேவை ஆரம்பம்

மட்டக்களப்பு, டிசெ.27
மட்டக்களப்பிலிருந்து, திருகோணமலை, கொழும்பு ரயில் சேவைகள் கடந்த புதன்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் துரித முயற்சியினால் றீ பில்ட் ஸ்ரீலங்கா திட்டத்தின் ஒரு கட்டமாக சேதமடைந்த ரயில் பாதைகள் திருத்தப்பணிகள் யாவும் நிறைவடைந்ததையடுத்து மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கான உதயதேவி ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருகோணமலையிலிருந்து கொழும்பிற்கான சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் இருந்து செல்லும் பயணிகள் கல் ஓயாச் சந்தியில் இறங்கி திருமலையில் இருந்து வரும் கொழும்பு ரயிலில் மாறவேண்டும். இதேவேளை மாகோவில் இருந்து மட்டக்களப்புக்கான சரக்கு மற்றும் எரிபொருள் சேவைகளும் கடந்த புதன்கிழமை தொடக்கம் மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)



## இலஞ்சம் பெற்றாரென பொலிஸ் அதிகாரி கைது

இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் பேரில் கம்பஹா பொலிஸ் தலைமையகத்தின் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகம் தெரிவித்துள்ளது.
ஜாஎல, தண்டுகம பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. திருடப்பட்ட தங்க நகைகள் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்கும் முறைப்பாட்டைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாமல் இருந்ததற்குமாக 3 இலட்சம் ரூபா மற்றும் முக்கால்வாசி தங்கத்தை இலஞ்சமாகக் கேட்டார் எனச் சந்தேகநபர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இலஞ்சத்தின் ஒரு பகுதியாக பொலிஸ் அதிகாரி ஏற்கனவே 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெற்றுள்ளார் என்று புலனாய்வாளர்கள் தெரிவித்தனர். (ச-இ)

## கண்டி மாவட்டத்தில் வெடிகுண்டு மிரட்டல்

கொழும்பு, டிசெ.27
கண்டி மாவட்டச் செயலகத்தில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சிறப்புத் தேடுதல் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.
தொடர்புடைய தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ள பொலிஸாருடன் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டனர்.
கண்டி மாவட்டச் செயலகத்தில் வெடிகுண்டு இருப்பதாக மின்னஞ்சல் செய்தி மூலம் ஒரு அநாமதேய செய்தி வந்ததைத் தொடர்ந்து இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ச-இ)




## என்னத்தைச் சொல்ல..?

மறதி எண்டது எங்களுக்குத் தேசியவியாதி. எல்லாத்தையும் உடன மறந்திடுவம், அதுவும் உந்த பேஸ்புக், யூரியூப் வந்த பிறகு உந்த மறதி இன்னும் கூடிப்போட்டுது, முந்தி ஒரு விசயத்தைப் பற்றி குறைஞ்சது ஒருமாதமெண்டாலும் கதைப்பம். ஆனால் இப்ப அப்பிடியோ? இண்டைக்கு ஒரு விசயத்தைப் பற்றி எல்லாரும் வெட்டி விழுத்திறமாதிரிக் கதைப்பினம். அடுத்தநாள் இன்னொரு விசயம் ட்ரெண்டிங்கில வர, முதல் நாள் கதைச்ச விசயத்தை அப்பிடியே விட்டுட்டு, இந்தப் புது விசயத்துக்குத் தாவிடுவினம். இப்பிடி நாளுக்கொரு விசயத்துக்குத் தாவிறதால, ஒரு விசயத்தையும் உருப்படியா நினைவில வைச்சிருக்கிறேலை. அப்பிடி மறதியின்ர மாணிக்கங்களாக மாறிப்போன எங்களுக்கு, போன வருசம் கிறிஸ்மஸ் நாளில கிளிநொச்சியில டிப்பர் அடிச்சு, ரண்டு வயதுக் குழந்தையும், தாயும் செத்த செய்தி நினைவில இருக்காதுதானே.

அந்த அக்சிடெண்டில மோட்டார் சைக்கிளில போன குடும்பமொண்டை எங்கேயோ இருந்து வெறித்தனமா வந்த டிப்பர் அடிச்சதில குழந்தை அதிலேயே செத்துப் போட்டுது. மிச்சம் மூண்டுபேருக்கும் கடும் காயம். அதில தாயின்ர நிலைமை மோசம். அவாக்கு எவ்வளவோ கஷ்டப்பட்டு ட்ரீட்மெண்ட் குடுத்தும் காப்பாத்த முடியேலை. ரைவருக்கு நல்லவெறி. அதாலதான் உப்பிடி மோட்டுத்தனமாக் கொண்டந்து சும்மா போன மோட்டார் சைக்கிளுக்கு இடிச்சவர். மனிசியையும், பிள்ளையையும்பறிகொடுத்தவர் தன்ர வேதனையைக் குறைக்கிறதுக்கும், மற்றவை இப்பிடியொரு அநியாயமான அக்சிடெண்ட் நடந்ததை மறக்காமல் இருக்கிறதுக்கும், போக்குவரத்து விழிப்புணர்வுக்காக பஸ் கோல்ட் (பஸ் தரிப்பு நிலையம் ஒண்டைக் கட்டி முதலாமாண்டு நினைவா கிளிநொச்சியில திறந்துவைச்சிருக்கிறார். அந்த பஸ் தரிப்பு நிலையத்துக்குள்ள 'மதுபோதையில் வாகனம் செலுத்தவேண்டாம்' எண்ட வாசகம் எழுதுப்பட்டிருக்குது, அதோட போக்குவரத்து விதியளையும் போட்டிருக்கினம். இதுகளைப் பார்த்த பிறகாவது குடிச்சுப்போட்டு வாகனம் ஓடுற ரைவர்மாரில ஆரும் ஒருத்தர் திருந்தினால்கூட நல்லதுதானே.

இப்பிடித் தனக்கு வந்தமாதிரி இழப்பும், வேதனையும் அடுத்தவைக்கு வரக்கூடாது எண்டதுக்காக அவர் பஸ் தரிப்பு நிலையத்தைக் கட்டினது ஒரு நல்ல முன்னுதாரணம். ஆனால் என்னதான் அவர் விழிப்புணர்வு செய்தாலும், எங்கட ஆக்கள் மாறப்போறேலை எண்டதும் உண்மைதான். ஏனெண்டால் அந்தக் குடும்பத்தை கண்ணிமைக்கிற நேரத்துக்குள்ள சிதைச்சு சின்னாபின்னமாக்கின டிப்பரையும், ரைவரையும் அங்க நிண்ட சனங்கள் முறையாக் கவனிச்சுப் போட்டுத்தான் போன வருசம் பொலிஸில குடுத்தவை. ஆனால் கொஞ்ச நாளிலேயே அந்த ரைவர் பிணையில வெளியில வந்திட்டார். அவைக்கு இடிச்ச பச்சை டிப்பரும் இப்ப மண் ஏத்திக்கொண்டு உலாத்துது. அதுமட்டுமில்லாமல், இப்ப திரும்பவும் அந்த ரைவர் டிப்பர் ஓடிக்கொண்டுதான் திரியிறார். எங்கட நாட்டுச் சட்டதிட்டங்கள் அப்பிடி. உண்மையில இப்பிடி வெறியில வாகனம் ஓடி, ரண்டு பேரைக் கொலை செய்தவருக்கு பிணையே குடுத்திருக்கக்கூடாது. அதோட அவரின்ர லைசென்ஸையும் நிப்பாட்டி இருக்கோணும். ஆனால் அந்தாள் அக்சிடெண்ட் நடந்த நாலைஞ்சு மாதத்திலேயே திரும்பவும் டிப்பர் ஓடுறாரெண்டால் என்னத்தைச் சொல்ல?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | மறைவு |
|---|---|---|
| 01.03.1926 | | 24.12.2025 |



## திரு பொன்னையா நாகராசா

**FOUNDER - NARMATHA GOLD CENTRE & MONEY EXCHANGE (pvt ltd)**
**(COLOMBO, JAFFNA, KILINOCHCHI)**

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும் இல 11 ஹெலன்கடுவ பிளேஸ், OFF 1st செப்பல் லேன், கொழும்பு - 5 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பொன்னையா நாகராசா அவர்கள் 24.12.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வரும், காலம்சென்றவர்களான மயில்வாகனம் - கனகாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலம்சென்ற லோகேஸ்வரியின் அன்புக்கணவரும், லோகேஸ்வரன் (ராசன்) (Germany) ஸ்ரீரஞ்சனி (கலா) (France) ராஜேஸ்வரன் (சூட்டி) (Germany), ஜெகதீஸ்வரன் (கண்ணன்) Chairman Narmatha gold centre ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினி (Germany), கந்தசாமி (France), மல்லிகாராணி (Germany), சசிகலா (Managing Director Narmtha gold centre) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், துசித்தா, சோபியா, கோபிகா (Germany) கஸ்தூரி, அவினாஷ் நர்மதா (France), திவிஷன், தர்ஷன், அயிஷன் (Germany), கஜானனன் (Civil Engineer UK, Excecutive Director Narmatha Gold Centre) கீர்த்தனா (UK), அருண் (UK) ஆகியோரின் அன்பு பேரனும் இசானா, ஜலான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல-11 ஹெலன்கடுவ பிளேஸ், off 1st செப்பல் லேன், கொழும்பு - 6 இல் உள்ள அவரது இல்லத்தில் இருந்து 28.12.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பொரளை பொது இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினரகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60278) E

**யாழ்ப்பாணம் கொழும்பு**
**வாகன ஒழுங்கமைப்பிற்காக**
விஜி - 076 924 3507
தீபன் - 077 171 0877
மயூரன் - 076 042 3154
தவபாலன் சரவணை - 077 376 8988
ஆகியோரை அழைக்கவும்

**தகவல்: குடும்பத்தினர்**
கலா (மகள்) (France ) 0033695174672
சூட்டி (மகன்) (Germany) 004917662946288
கண்ணன் (Srilanka) 0094777894566

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## உதவிகளை மட்டுமே நம்பியிருக்கும் தேசம்

ஆழிப்பேரலை எனும் கோரத்தாண்டவத்தால் இலங்கையின் கடற்கரையோரங்கள் சின்னாபின்னமாகி, பல்லாயிரம் உயிர்கள் மாண்டுபோன பெருந்துயரம் நிகழ்ந்து நேற்றோடு இருபத்தியொரு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் இந்த ஆழிப்பேரலையில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்ந்து உணர்வுபூர்வமான அஞ்சலிகள் செலுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நினைவேந்தலின் போதும் கசியும் கண்ணீரும், ஏற்றப்படும் தீபங்களும் இழப்பின் வலியைச் சுமந்திருப்பவர்களின் ஆறாத வடுக்களைப் பிரதிபலிக்கின்றன. ஆனால், வெறும் சடங்குகளாகவும் அஞ்சலிகளாகவும் மட்டும் இந்த நினைவுதினங்கள் கடந்து செல்வது, ஒரு தேசமாக நாம் அனர்த்த முகாமைத்துவத்தில் அடைந்துள்ள தேக்கநிலையையே காட்டுகிறது.

சுனாமி எனும் இயற்கையின் சீற்றம் எமக்குக் கற்றுக்கொடுத்த பாடங்கள் ஏராளம். ஒரு கடற்கரையோர தேசம் என்ற வகையில், அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்கான தயார்நிலை, முன்னெச்சரிக்கை கட்டமைப்பு மற்றும் அனர்த்த காலப்பாதிப்புகளைக் குறைக்கும் நுட்பங்கள் என்பவற்றில் நாம் முன்னோடிகளாக இருந்திருக்கவேண்டும். ஆனால், இருபத்தியொரு ஆண்டுகள் கடந்தும்கூட, அண்மையில் தாக்கிய 'டித்வா' புயலின் விளைவுகள் அனர்த்த முகாமைத்துவத்தில் நாம் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே இருப்பதை அம்பலப்படுத்தியுள்ளன. இயற்கைப் பேரிடர்கள் நிகழும்போது அதனை எதிர்கொள்ளும் சுயமாக மீளும் திறன் (Resilience) நம்மிடம் மிகக் குறைவாகவே உள்ளது. ஒவ்வொரு முறையும் பாதிப்புகள் ஏற்பட்ட பிறகு சர்வதேச உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையும், தற்காலிக நிவாரணங்களுடன் கடந்து செல்லும் போக்கும் ஒரு நிலையான தீர்வாக அமையாது.

அனர்த்த முகாமைத்துவம் என்பது வெறும் பெயரளவில் மட்டும் இயங்கும் ஒரு துறையாக இருக்கக்கூடாது. மண்முனை தென் எருவில்பற்று பிரதேசசபை இந்த வருடம் ஆழிப்பேரலை நினைவுநாளில் முன்னெடுத்துள்ள ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் போன்ற சூழலியல் சார்ந்த தற்காப்பு நடவடிக்கைகள் நாடெங்கும் பரவலாக்கப்படவேண்டும். கரையோரப்பாதுகாப்பு, முறையான முன்னெச்சரிக்கை சமிக்ஞைகள் மற்றும் அனர்த்தங்களின் போது மக்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதற்கான முறையான விழிப்புணர்வுப் பயிற்சிகள் அடிமட்டம் வரை கொண்டு செல்லப்படவேண்டும். தொழில்நுட்ப வசதிகள் வளர்ந்துள்ள இன்றைய காலத்தில், உயிர்ச் சேதங்களைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தும், பாதிப்புகள் தொடர்வது நமது திட்டமிடலில் உள்ள பெரும் ஓட்டையைச் சுட்டிக் காட்டுகிறது.

சர்வதேச உதவிகள் என்பவை காயங்களுக்குப் போடப்படும் மருந்தாக இருக்கலாமே தவிர, காயங்களே ஏற்படாமல் தடுப்பதற்கான கவசமாக மாறாது. கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை வெறும் புள்ளிவிவரங்களாகப் பார்க்காமல், அவற்றை எதிர்காலத்திற்கான வழிகாட்டியாக மாற்ற வேண்டிய பொறுப்பு அரசிற்கும் சமூகத்திற்கும் உண்டு. இருபத்தியொரு ஆண்டுகளுக்கு முன்பிருந்த அதே கையறு நிலையை மீண்டும் மீண்டும் நாம் எதிர்கொள்வது ஒரு முதிர்ச்சியுள்ள சமூகத்துக்கு அழகல்ல. இனிவரும் காலங்களிலாவது அனர்த்தங்களை முன்கூட்டியே எதிர்கொள்ளும் தன்னிறைவு பெற்ற கட்டமைப்பை உருவாக்குவதே, ஆழிப்பேரலையிலும் ஏனைய அனர்த்தங்களிலும் உயிரிழந்த ஆன்மாக்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக அமையும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

### நாளொரு நல்வார்த்தை

உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றி எதையுமே சாதிக்கமுடியாது.

–எமர்சன்–




## வாக்காளர் கணக்கெடுப்பு பெப்ரவரியில் ஆரம்பம்!

பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.27**

**2026ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புத் திருத்தப் பணிகள் மற்றும் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் 2026ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பான பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.**

இதுதொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த காலங்களைப் போலவே இம்முறையும் கணக்கெடுப்பு அதிகாரிகள் அனைத்து வீடுகளுக்கும் நேரில் செல்லமாட்டார்கள். வாக்காளர் பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்படவேண்டிய பெயர்கள் மற்றும் நீக்கப்படவேண்டிய பெயர்களை உள்ளடக்கிய 'A' மற்றும் 'Aa' பட்டியல்களைப் புதுப்பிப்பதற்குத் தேவையான வீடுகளுக்கு மாத்திரமே அதிகாரிகள் செல்வர்.

கணக்கெடுப்பு நடைபெறும் முறையை அவதானிக்க அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படும்- என்றுள்ளது. (ச-இ)



அம்பலாங்கொடையில்

## துப்பாக்கிச்சூடு 6 பேர் கைது

கொழும்பு, டிசெ.27

கடந்த 22ஆம் திகதி அம்பலாங்கொடைப் பிரதேசத்தில் காட்சியறை முகாமையாளர் ஒருவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில் ஆறு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஹிக்கடுவ பிரதேசத்தில் வைத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கி மற்றும் ஒரு ரிவோல்வர் ஆகிய துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-இ)

## டிப்பர்– பஸ் விபத்து 30 பேர் காயம்!

கொழும்பு, டிசெ.27

திக்வெல்ல - பெலியத்த வீதியின் ஹதபாங்கொடல்ல பிரதேசத்தில் டிப்பர் ரக வாகனம் ஒன்றும் பேருந்து ஒன்றும் நேருக்குநேர் மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.


இந்த விபத்தில் சுமார் 30 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## சிறப்புச் சோதனையில் 2,341 துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு, டிசெ.27

2025 ஜனவரி முதலாம் திகதி முதல் நடத்தப்பட்ட சிறப்புத் தேடுதல் நடவடிக்கைகளில் மொத்தம் 2,341 துப்பாக்கிகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இதில் 73 ரி-56 ரக துப்பாக்கிகள், 59 ரிவால்வர்கள் மற்றும் 2,126 பிற துப்பாக்கிகள் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## யானைகளின் இறப்பு இவ்வருடத்தில் உயர்வு

கடந்த 2024ஆம் ஆண்டைவிட இந்த ஆண்டு யானைகளின் இறப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வனவிலங்குப் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு யானைகளின் இறப்பு 388 ஆக பதிவாகியுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் 18 திகதி வரை 409 யானைகள் உயிரிழந்துள்ளதாக வனவிலங்குப் பாதுகாப்புத் துறையின் பிரதிப் பணிப்பாளர் யு.எல். தௌபிக் தெரிவித்தார். (ச-இ)

ஞாயிற்றுக்கிழமை – மார்கழி 13
28.12.2025
சுபநேரம் : 09.28 - 10.58
ராகுகாலம் : 04.58 - 06.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 ஏக்கர்...

பட்ட காணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் நேற்றுப் பார்வையிட்டதுடன், விடுவிக்கப்பட்ட பகுதிக்குப் பொறுப்பான இராணுவ உயர் அதிகாரிக்கு தொலைபேசி மூலம் நன்றியையும் தெரிவித்தார்.

"துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில், இராணுவத்தினால் விடுவிக்கப்பட்டுள்ள இந்த 25 ஏக்கருக்கும் மேற்பட்ட மக்களின் காணிகள், அவற்றின் உரிமையாளர்களிடம் விரைவாகக் கையளிக்கப்படும்" என்று இளங்குமரன் எம்.பி. தெரிவித்தார். (அ-50-66)

## விபத்தில் ஒருவர்...

சேர்ந்த ஆ.சத்தியசீலன் (வயது - 75) என்பவரே உயிரிழந்தவராவார். வீதியால் துவிச்சக்கர வண்டியில் பயணித்த குறித்த நபரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் வீதியில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார். (அ-ச-41-131-26)

## மரண அறிவித்தல்



பிறப்பு 22.04.1948 — இறப்பு 26.12.2025

திருச்சிலுவை கன்னியர் சபையைச் சார்ந்த

**அருட்சகோதரி**

**றீனா இராசையா**

அவர்கள் நேற்று (26.12.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


இவரது ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி கடற்கரை வீதியில் அமைந்துள்ள திருச்சிலுவை கன்னியர் இல்ல சிற்றாலயத்தில் இன்று (27.12.2025) சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா மறுவாழ்வு முற்றத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
மாகாணத் தலைவி
திருச்சிலுவைக் கன்னியர் சபை.

(CR 46785) A

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 09 . 1941 — இறப்பு 26 . 12 . 2025



**திரு.நாகரட்ணம் மயில்வாகனம்**

**(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ்/பரியோவான் கல்லூரி, சென்.தோமஸ் கல்லூரி - கொள்ளுப்பிட்டிய)**

பன்னாலை தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகரட்ணம் மயில்வாகனம் அவர்கள் நேற்று (26.12.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
074 3545 115
+61 421 858 821
+61 422 027 625

**இல.95, செட்டித்தெரு,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

(CS 30973) A

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் அமைந்துள்ள CCRC நிறுவனத்தில் (கனடாவை மையமாக கொண்டு இயங்கும் புனர்வாழ்வு நிலையத்தில்) கீழே உள்ள பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- உதவி முகாமையாளர் (Assistant Manager)
- அலுவலக நிர்வாக உத்தியாகத்தர் ( Office Administrator)
- மேற்கண்காணிப்பாளர் (Supervisor)

பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
Send the CV to ccrcclinic@gmail.com.
Contact - **077-124-2641**

(CS/60281) J-1

## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் (அனுபவமுள்ளவர்கள்) | - RS 35 000.00 |
| மேசன் உதவியாளர்கள் | - RS 2500.00 |
| வெல்டர் | - RS 3500.00 |
| வெல்டர் உதவியாளர் | - RS 2500.00 |
| வயறிங் | - RS 2500.00 - 3000.00 |
| பிளமிங் | - RS 2500.00 - 3000.00 |
| தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - RS 2500.00 - 3000.00 |

(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)

**077 210 0749** (காலை 08.00 - மாலை 05.30 வரை) யாழ்ப்பாணம்

# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.

## பொது அறிவித்தல் - 2026

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் வசிக்கும் சகல பொதுமக்கள் மற்றும் தொழில் நிறுவன உரிமையாளர்கள் சபையினால் வழங்கப்படும் கீழ்வரும் சேவைகளுக்கான அனுமதிகளை பிரதேசசபை சட்ட ஏற்பாடுகள், சபைத்தீர்மானங்களிற்கு அமைவாக பெற்று நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் குறித்த நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர் மீது பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

1) வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2026

சபை எல்லைக்குள் சகல வியாபார, தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுபவர்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 149, 150, 151 ஆம் உப பிரிவுகளிற்கு அமைவாக இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருட்களை விநியோகிப்போர் 2026 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்று அதனை பூரணப்படுத்தி தங்கள் பகுதிக்கு பொருத்தமான உப அலுவலகங்களில் (கொக்கிளாய், செம்மலை, முள்ளியவளை, முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால்) சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 2026.03.31 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

தற்காலிக வியாபாரம்:- வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் தற்காலிக வியாபாரம் செய்வதாயின் அந்நிலத்திற்கு பெற்றுக்கொள்வதுடன், சொந்தமான பிரதேசசபையின் வியாபார திணைக்களத்திடம் அனுமதி அனுமதியையும் பெற்றிருத்தல் வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

2) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் - 2026

1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்து புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும்.

**3) கட்டடங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல், புதுப்பித்தல், திருத்துதல் கட்டணங்கள் அறவிடல் - 2026**

கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், எல்லைச்சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், மலசலகூடம் அமைத்தல், கிணறுகள், குழாய்க்கிணறுகள் அமைத்தல், கட்டிடங்கள் விரிவாக்கல், திருத்துதல், புதுப்பித்தல் என்பன பிரதேசசபையின் முன் அனுமதி பெற்று செயற்பட வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அல்லது நட்டஈடின்றி அகற்றப்படும்.

கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டட அமைவுச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**4) துவிச்சக்கரவண்டி உரிமம், மிருக வரி உரிமம் பெற்றுக்கொள்ளல் - 2026**

2026 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 2026.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5) விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் .ரு மருங்காகவும், வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேசசபையில் கட்டணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள்ஃநிறுவனங்கள்ஃமுகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்.

**6) முச்சக்கரவண்டி தரிப்பிடம்**

சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென சபையால் ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேசசபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யப்படவும் வேண்டும்.

7) மரக்கறி, மீன், ,றைச்சி விற்பனை தடைசெய்தல்

கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 1முஅ தூரத்திற்குட்பட்ட கடைகள் அல்லது வேறு இடங்களில் மரக்கறி, இறைச்சி, பழங்கள் மீன், கருவாடு என்பன விற்பனை செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

8) படவரைஞரைப் பதிவு செய்தல் / புதுப்பித்தல் - 2026

2026 ஆம் ஆண்டுக்கு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராகப் பதிவு செய்தவர்களும் 2026.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவோ அல்லது புதுப்பித்துக் கொள்ளவோ முடியும். தவறின் குறிப்பிட்ட திகதியின் பின்னர் பதிவினை மேற்கொள்ள முடியாது. மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**9) பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல், கழிவுநீர் கால்வாயைத் தடைசெய்தல்.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களை போடுதல், கழிவுநீர்க் கால்வாயைத் தடைசெய்தல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்தும், மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தி கழிவுகள் அகற்ற ஒத்துழைப்பதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

10) பொது சுகாதாரம் பேணல்

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள்ஃபராமரிப்பாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**11) பொது மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணம் அறவிடப்படும்.**

சபையின் ஆளுகைக்குட்பட்ட பொது மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணமாக ரூபா 1000.00 அறவிடப்படும். .க்கட்டணத்தை அப்பிரதேசத்திற்குரிய சனசமூக நிலையத்திடம் செலுத்தி அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும். அனுமதிக்காக இறப்பு தொடர்பாக கிராம சேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**12) வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக**

சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்களின் பரிபாலனத்துக்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற தனியார் நிறுவனங்கள் பிரதேசசபையில் முறைப்படி அனுமதி பெற்ற பின்பே தமது சேவையை ஆரம்பித்தல் வேண்டும்.

13) கட்டாக்காலி விலங்குகள் தொடர்பானது

சபை எல்லைக்குள், வீதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் விலங்குகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு உரிமை கோரும் பட்சத்தில் தண்டம் மற்றும் பராமரிப்புச் செலவுடன் மீள வழங்கப்படுவதுடன், உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

**பிரதேசசபையால் வழங்கப்படும் சேவைகள்**

**1) குடிநீர் வழங்கல் சேவை**

எமது பிரதேசசபைக்குட்பட்ட பொது மக்களிற்கான குடிநீர் விநியோகம் லீற்றர் ரூபா-2.00 என்ற கட்டண அடிப்படையில் பிரதேசசபையின் தங்கள் பகுதிக்கு பொருத்தமான உப அலுவலகங்களில் (கொக்கிளாய், செம்மலை, முள்ளியவளை, முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால்) செலுத்துவதன் மூலம் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**2) கனரக வாகன சேவைகள்**

JCB வாகன சேவையினை பெறுவதற்கு தலைமைக்காரியாலயத்தில் சேவைக்கான கட்டணங்களை அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை பணமாக செலுத்தி சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**3) கலிபௌசர் வாகனசேவை**

கலிபௌசர் கழிவகற்றல் சேவைகளிற்கான கட்டணங்களை அந்தந்த உப அலுவலகங்களில் அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை பணமாக செலுத்தி சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.


தவிசாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை. 27.12.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிப்பும் ஒளிவிழாவும்

யாழ்ப்பாணம்,டிசெ.27
யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் பணியாளர் கௌரவிப்பும், ஒளிவிழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. சங்கத் தலைவர் தி.பிரபாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத் தந்தை அருட்பணி றொசான் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் க.கமலநாதன், யாழ்.சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சசிகரன், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.குருபரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (சு-17)

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 09 . 1941

மறைவு 26 . 12 . 2025

### சரவண குணரத்தினம்

மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவண குணரத்தினம் அவர்கள் நேற்று (26.12.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் தனநாயகி அவர்களின் கணவரும், பிரசாத், கஜந்தினி, கஜன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 30978) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 07 . 1983

மறைவு 24 . 12 . 2025

### ஜனந்தனன் கலையரசி (திவிசா)


சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜனந்தனன் கலையரசி (திவிசா) அவர்கள் கடந்த (24.12.2025) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சாரதாதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் வள்ளியம்மை (பிரான்ஸ்) தம்பதியரின் பாசமிகு மருமகளும், ஜனந்தனனின் அன்பு மனைவியும், ஜெருஷா, ஜயவர்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கலைவாணி, கலைவர்மண், கலைச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜனகன் (கொழும்பு), தனஞ்சயன், ரமணிதரன் (பிரான்ஸ்) மற்றும் செந்தில்ரூபன், வினோதரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மீரா, சரண்யா ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், கவிஷா, கனிகா, கஜானா, கவினஜன், ஏகன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், முருகையா - புஸ்பராணி தம்பதியரின் மருமகளும், மகாலிங்கம் (சுவிஸ்), பாலசிங்கம் (சுவிஸ்), சுந்தரலிங்கம் (தாவடி) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஈஞ்சடி வைரவர் கோவிலடி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 072 4054

(CS 30970) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 03 . 1984

மறைவு 07 . 12 . 2025

### குகபாலன் மயூரன் (செல்வம்)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், அளவெட்டி மேற்கு தம்மளையை வசிப்பிடமாகவும், Canada (Toronto) வை இருப்பிடமாகவும் கொண்ட குகபாலன் மயூரன் அவர்கள் கடந்த (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை Canada Toronto இல் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற குகபாலன் - பூபதி தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரன் - நாகசோதி தம்பதியரின் அன்பு மருமகனும், தர்ஷிகாவின் பாசமிகு கணவரும், ஹேமிசா, கவிநயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திலீபாகரன், கஜேந்திரன் (Canada), லோகேசன் (UK), தரணீதன் (Canada) ஆகியோரின் சகோதரனும், பிரார்த்தனா (Canada), கஜனியா (UK), அஜந்தா (Canada), தர்ஷனன் (Newzeland), கீர்த்திகன் ஆகியோரின் மைத்துனரும், ஆதிராவின் சிறிய தந்தையும், திலீயா, நிருதியா ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணியளவில் Ajax Crematorium & Visitation Centre (384 Finley Ave, Ajax, ON L1S 2E3) அங்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
கஜேந்திரன் - 416 570 1394
கீர்த்திகன் - 077 544 2260

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(CS/30920) J-1

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 30 . 12 . 1958

இறைவன் அடியில் 26 . 12 . 2025

### திருமதி நற்குணராசா பூலோகராணி

(ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர்)

அல்லாரை, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், காளியானை, புத்தூர் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நற்குணராசா பூலோகராணி அவர்கள் நேற்று (26.12.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லையா - நவமணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், நற்குணராசா (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு மனைவியும், பூபாலசிங்கம், காலஞ்சென்ற பூலோகநாயகி மற்றும் பூலோகநாதன் (பிரான்ஸ்), பூலோகஇந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், துரைராசா (லண்டன்), நவரத்தினராசா (லண்டன்), சர்வானந்தம் (கனடா), செல்வராணி, காலஞ்சென்ற பரமானந்தராசா, சண்முகராசா (கனடா) ஆகியோரின் மைத்துனியும், நிறூபன் (பொது சுகாதார பரிசோதகர்), நிதர்சன் (கனடா), நிலக்ஷிகா (உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவானி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், தென்மராட்சி கல்வி வலயம்), சஜித்தா (கனடா), சுகன்யன் (மென்பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அதிரா, ஆருஷ், ஆர்த்தி ஆகியோரின அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் புத்தூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மகள் - 077 6476 598
மருமகன் - 077 0116 039

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 30977) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அலையோடு உறவாடு' காங்கேசனில் ஞாயிறு

யாழ்ப்பாணம்,டிசெ.27

வலிகாமம் வடக்கு பிரதேசசபை சுற்றுலாப் பணியகத்தின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை கடற்கரைப் பிரதேசத்தில் பண்பாடு மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டு நிகழ்வான 'அலையோடு உறவாடு' நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறைக் கடற்கரையில் காலை 8 மணிதொடக்கம் இரவு 8 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதன்போது உணவுத் திருவிழா, சிறுவர் விளையாட்டு, இசை நிகழ்ச்சி என்பன இடம்பெறவுள்ளன.

நிகழ்வுக்கு அனுமதி இலவசம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# டெங்கு ஒழிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.27

கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மற்றும் விதையனைத்தும் விருட்சம் ஆகியன இணைந்து நடத்தும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.01 மணிமுதல் கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலைய முன்றலிலிருந்து ஆரம்பமாகவுள்ளது. (ச-41)


# வடமராட்சி உடுத்துறையில் சுனாமி நினைவேந்தல்!

யாழ்ப்பாணம்,டிசெ.27

21ஆவது ஆண்டு சுனாமி நினைவேந்தல் உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நேற்று நடைபெற்றது. சுனாமி நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நினைவுத்தூபிக்கு மலர்மாலை அணிவித்து, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக தலைமைக் கிராம சேவையாளர் தோமஸ் யூட் மலர்மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்துவைக்க, அதனைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தங்கவேல் தங்கரூபன் உட்பட அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (ச-27,17,66-100)



**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.

1 சதுர அடி - 85 ரூபா

நிலம் இழுத்துப் பதிக்க - 110 ரூபா

தொடர்பு: 077 334 1281

(CR 46778) E

**பாராட்டி வாழ்த்தி வெற்றிக்காய் வாக்களிப்போம்**

யாழ் மக்களைத் தன் குரலிசையால் வசப்படுத்தும் இளம் பாடகி செல்வி இ.தசிகா அவர்கள், தென்மராட்சி மண்ணிற்கு கிடைத்த ஒரு இசைக்குயில். அவர் தற்போது உலகளாவிய ரீதியில் இனிய குரலால் பாடிப் பிரபல்யம் அடைந்து வருகிறார். யாழ் மண்ணில் பிறந்து தற்போது சர்வதேசத்திலிருந்தும் பங்கு கொள்ளும் இசைப் போட்டியாளர்கள் போட்டியிடும் பாரிய இசை மேடையான shakthi Crown மேடையில் தன் அதீத ஆற்றலாலும் ரசிகர்களின் வாக்குகளினாலும் இன்று நடைபெறும் இறுதிச்சுற்றில் கால் பதித்துள்ளார். தன் கனவை நனவாக்க, அதீத முயற்சி செய்து போட்டியின் நடுவர்களின் மனங்களை வென்ற அவர், இவ்விறுதிச் சுற்றில் மகுடத்தைச் சூடிட ரசிகர்களின் வாக்குகள் மிக அவசியமானவை. எங்கள் மண்ணின் மாண்புக்காகவும் மக்களை மகிழ்விப்பதற்காகவும் போட்டியில் பங்கு கொள்ளும் அவருக்கு, இசையை நேசிக்கும் நாம் ஒவ்வொருவரும் ஒன்றிணைந்து எமது வாக்குகளை அவருக்கு வழங்கி, ஆதரவினை நல்குவோம்.



திகதி : 27.12.2025 சனிக்கிழமை (இன்று)

நேரம் : மாலை 6.00 மணி

(மாலை 6:45 மணியளவிலிருந்து வாக்குக்களை அளிக்க ஆரம்பிக்கலாம்)

வாக்களிக்கும் முறை...

SC (space) 10 என Type செய்து 7788 என்ற இலக்கத்திற்கு SMS இனூடாக தொடர்ச்சியாக வாக்களிக்க முடியும் (Reload செய்வதனூடு மட்டும்)

மற்றும் TV திரையில் காண்பிக்கப்படும் QR code, id Scan செய்வதனூடாகவும் வாக்களிக்கலாம்

Shakthi Crown Facebook, Youtube மற்றும் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பாகும்

**சிறீ வெற்றிலைக்கடை**

**கொடிகாமம்**

IDMNC INTERNATIONAL

**IDM Nations Campus International**

**சர்வதேச அங்கீகாரத்துடன் உங்கள் உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கான சிறந்த பாதையை இன்றே தொடங்குங்கள்!**

**Diploma Programmes**

- ✓ Law (சட்டம்)
- ✓ AI (செயற்கை நுண்ணறிவு)
- ✓ Business Management
- ✓ Computing (Software Development)
- ✓ Psychology & Counselling
- ✓ Hotel & Hospitality Management
- ✓ English & Communication Skills



Limited 50 Seats Only Offer

எங்களை ஏன் தேர்வு செய்ய வேண்டும்?

- மேற்படிப்பிற்காக மிக எளிதாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு
- உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழிகாட்டல்
- Online / Physical வகுப்புகள் மற்றும்
- Flexible Timetable

**Admissions Open**

15.01.2026 இற்கு முன்னர் விண்ணப்பிப்பவர்களுக்கு 50% விலைக்கழிவு.

பண்டிகைக்கால சிறப்பு தள்ளுபடிக்கு உடன் அழையுங்கள்.

உங்களின் வளர்ச்சி, நம்பிக்கை மற்றும் உலகளாவிய வாய்ப்புகளுக்குத் தயாராக்கும் சர்வதேச DIPLOMA வை தேர்வு செய்யுங்கள்.

இக் கற்கை நெறிகள் வேலைக்கு மட்டும் அல்ல - உங்களின் வெற்றிகரமான வாழ்க்கைக்கு உங்களைத் தயாராக்கும்

| Vavuniya Campus | Jaffna Campus | Anuradhapura Campus |
| --- | --- | --- |
| No: 5 Kali Kovil Road, Kurumankadu, Vavuniya | Hospital Road, Jaffna (Near to US Hotel) | No: 488/05 E, In front of the Keels Super Market, Anuradhapuram |
| 077 111 8446 | 077 666 6648 | 077 769 2589 |

The Association of Commonwealth Universities

UGC

BUCKINGHAMSHIRE NEW UNIVERSITY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 07 . 1936



மறைவு 25 . 12 . 2025

### குமாரசாமி தங்கம்மா

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தங்கம்மா கடந்த 25.12.2025 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், நாகம்மா, முருகேசு, கனகரத்தினம் மற்றும் யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தினி, ஸ்ரீதரன், மாதினி, பத்மினி, மைதிலி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை கிழக்கு காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 633 9803

(CR 467841) A

## மரண அறிவித்தல்



### கவிஞர் சரவணமுத்து முருகையா (முருகு)

சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், சுவாமியார் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சரவணமுத்து முருகையா (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் - வலயக் கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்) அவர்கள் நேற்று (26.12.2025) வெள்ளிக்கிழமை கல்வயல் பெருங்குளம் வீரகத்தி விநாயகர் பாதக்கமலங்களைச் சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - நீலாயதாச்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், கந்தராசா, முத்தாச்சி, காலஞ்சென்ற கமலாட்சி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சரவணபவானந்தன் (UK), காலஞ்சென்றவர்களான கமலாம்பாள், தையல்நாயகி மற்றும் ஜெயலட்சுமி (Canada), ஆனந்தராசா (UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும், இந்துமதி, சிவமதி, பிரணவன், சரவணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாபரன், காலஞ்சென்ற பாலகுமாரன் மற்றும் சுபாஷினி, தரண்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், வாகினி, சிந்தூரி, அனுஜன், தேஜஸ்வினி, அபிஷேத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

45, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.

(CS/60252) J-1

தகவல்: குடும்பத்தினர்
077 166 3445

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 04 . 1955



மறைவு 18 . 12 . 2015

### திருமதி தனபாக்கியம் சூரியகுமாரன்

(மலர், குட்டியக்கா) (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர்)

திதி - அட்டமி

அம்மா - பத்தாண்டு ஆனதம்மா வைகுண்டம் நீங்கள் சென்று
எம் வாழ்வுக்கு நல் ஒளி கொடுக்க
உங்களை உருக்கிய மெழுகுதிரி - நீங்கள்
எங்கள் கல்வியே உங்கள் நோக்கமென
நீங்கள் பட்ட கஸ்டங்கள் மனதிலாடுகின்றன.
எங்களுக்காய் உங்கள் நோயை மறைத்து மறந்து வாழ்ந்ததேனோ?
பேரர்கள் உங்களை கேட்கும் போது விடையின்றி தவிக்கின்றோம்.
அன்னையே தெய்வமாயிருந்து என்றும் எங்களை வழிநடத்துங்கள்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

கேணியடி வீதி
மீசாலை மேற்கு, மீசாலை

(CS 60260) E

## மரண அறிவித்தல்

மலர்வு 12 . 04 . 2006



உதிர்வு 19 . 12 . 2025

### செல்வன் சஹீவன் நாதசொரூபன்

(2nd Year Medical Student at Nazareth University)

யாழ் ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், ஐக்கிய அமெரிக்கா Rochester, Newyork ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சஹீவன் நாதசொரூபன் அவர்கள் கடந்த (19.12.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆவரங்காலைச் சேர்ந்த சண்முகரட்ணம் - இராஜேஸ்வரி சண்முகரட்ணம் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்), மற்றும் பன்னாலையை சேர்ந்த நடராசா (ஓய்வுபெற்ற விரிவுரையாளர் தொழில்நுட்பக் கல்லூரி), காலஞ்சென்ற பாலயோகேஸ்வரி நடராசா ஆகியோரின் அன்புப் பேரனும், நாதசெரூபன் (முன்னாள் NSB - யாழ்ப்பாணம்), நிதர்சினி ஆகியோரின் அன்பு மகனும், போஜிராம், கவியுதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலமுருகனின் (டென்மார்க்) அன்பு பெறாமகனும், முகுந்தன் (பிரித்தானியா), வைகுந்தன் (NSB - ஊர்காவற்துறை) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் Anthony Funeral and Cremation 2305 Monroe Ave, Rochester, NY 14618, United States ல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
நாதசொரூபன் - தந்தை
+158 595 73113

(CS/60279) J-1

தகவல்:
வசந்தாதேவி செல்வறஞ்ஜன்
077 167 3999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.க.வின் தலைமையை எனக்கு வழங்குங்கள்

## தயாசிறி கோரிக்கை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய தலைவர் நிமால் சிறிபாலடி சில்வா தலைமையில் கட்சியை கட்டியெழுப்பமுடியாது. கிராமிய மட்டத்தில் சுதந்திரக்கட்சி விழுந்துள்ளது. தலைமைத்துவ மாற்றம் இன்றி அதனைக் கட்டியெழுப்பமுடியாது. எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியைத் தனக்குத் தர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மூன்று அணிகளாக பிளவுபட்டிருந் தது. நிமால் சிறிபாலடி சில்வா அணி, தயாசிறி தரப்பு மற்றும் மைத்திரி குழு என பிரிந்து செயற்பட்டுவந்தனர். இந்நிலையில் நிமால் சிறிபாலடி சில்வா அணியும், மைத்திரி தரப்பும் இணைந்துள்ளன. இதனையடுத்தே விஜயதாச ராஜபக்சவுக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டது. எனினும், தான் தான் கட்சியின் சட்டபூர்வமான செயலாளர் என தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுவருகின்றார். விஜயதாச ராஜபக்சவுக்கு வழங்கப்பட்ட நியமனத்தையும் சவாலுக்குட்படுத்தியுள்ளார். இந்நிலையிலேயே தலைமைப்பதவியில் மாற்றத்தை வலியுறுத்தியுள்ளார் தயாசிறி ஜயசேகர. (ச-இ)


# கிளிநொச்சி மாவட்டத்தில் சுனாமி நினைவுகூரல்!



சுனாமிப் பேரழிவினாலும் பல்வேறு இயற்கை அனர்த்தங்களினாலும் நாட்டில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூர்ந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் தேசிய பாதுகாப்பு தின நினைவு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது சுனாமி மற்றும் ஏனைய அனர்த்தங்களால் உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், சர்வமத ஆத்மசாந்தி பிரார்த்தனை நிகழ்வும் இடம்பெற்றது. நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் பங்குபற்றினார்கள். (ச-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 07 . 1973



மறைவு 26 . 12 . 2025

### கந்தசாமி தயாபரன்

(ஆசிரியர் - அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை)

கோணாவளை வசாவிளானை பிறப்பிடமாகவும், 32/4, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தயாபரன் அவர்கள் நேற்று (26.12.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி - சரஸ்வதி தம்பதியரின் மகனும், த.வனயாவின் கணவரும், கணேஷ் - திலகவதி தம்பதியரின் மருமகனும், கஸ்வினி, டிவேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் , தயாநிதி, ஜெயநிதி, கலாநிதி, கலைமகள், பாமினி, யதிஸ்கரன், வேணுலதா, பாவகி ஆகியோரின் சகோதரனும், நவரத்தினம், தவராசா, சந்திரன், பாலசுந்தரம், அருமைத்தம்பி, மோகனதாஸ், பிரதாஸ் ஆகியோரின் மைத்துனரும், மிதுகன், மதுகன், சக்திபைரவி, சர்மினி, சர்மளா, தர்சியா, சாள்ஸ், நிக்சன், கிருசியா, கிருசாந், நித்திகா, சனோஜா, நிதுசன், நிலக்சன், தர்சன், நிதர்சன், விதுசாயினி, மதுசா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

32/4, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 30971) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 14.09.1950 மறைவு 26.12.2025

### அழகரத்தினம் கோபாலச்சந்திரநாயகன்

(ஓய்வுபெற்ற முகாமையாளர்- இலங்கை வங்கி),
அகில இலங்கை சமாதான நீதவான்

கரவெட்டியை பிறப்பிடமாகவும், மருதநகர் கிளிநொச்சி, குமரகோட்டம், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் கோபாலச்சந்திரநாயகன் அவர்கள் நேற்று (26.12.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரத்தினம் - திலகவதிநாயகம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பத்மராணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவராஜசிங்கம் - சிவபாக்கியவதி தம்பதியினரின் அன்பு மருமகனும், கார்த்திகா (கொழும்பு), பிரதீபா (கால்நடை வைத்தியர் - லண்டன்), செந்தூரன் (முகாமையாளர்- எலயன்ஸ் பைனான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரராணி (பிரான்ஸ்), அமரர் ஜெனச்சந்திரரட்ணம், அமரர் சந்திரபவானி, திலகச்சந்திரரட்ணம் (பிரான்ஸ்), சந்திரவதனி (லண்டன்), அமரர் அழகச்சந்திரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் சண்முகலிங்கம், தேவராணி, ராதிகா (பிரான்ஸ்), திருநாமலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ராஜ்குமார் (பிரான்ஸ்), டினேஸ் (லண்டன்), ஜெயகலையரசி ஆகியோரின் மாமனாரும், பிரபாகர், ராகவி (லண்டன்), நேர்த்திரா, துதித்ரா, ஆதித்ரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.12.2025) குமரகோட்டம் கோண்டாவில் எனும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் "பத்மா பவனம்", மருதநகர், கிளிநொச்சி இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பி.ப 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 0740 351
077 1090 144

தகவல் :
குடும்பத்தினர்

(CS 30974) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டக்ளஸ்...

வெலிவேரியா பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த துப்பாக்கியொன்று மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வந்த விசாரணையின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

"இராணுவத்தினரால் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சட்டபூர்வமாக பிஸ்டல் ரக துப்பாக்கி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பாதாளக்குழு உறுப்பினர் ஒருவர் வெளியிட்ட தகவலுக்கமைய, வெலிவேரியா பகுதியில் மதகு ஒன்றுக்கு அருகில் பாழடைந்த இடமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2019 ஆம் ஆண்டு குறித்த பிஸ்டல் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்" என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆயினும்,

"ஈ.பி.டி.பி. அமைப்புக்கு முன்னைய அரசாங்கங்களால் வழங்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பிலான விசாரணைக்காக டக்ளஸ் தேவானந்தா குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார். இந்த விசாரணைக்காக நேற்றுக்காலை சென்ற டக்ளஸ் தேவானந்தா பலமணி நேரம் காக்க வைக்கப்பட்டு, மாலையிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. அதன் பின்னர், ஈ.பி.டி.பி. அமைப்பு பெற்ற ஆயுதங்களின் எண்ணிக்கைக்கும், மீளவும் ஒப்படைத்த ஆயுதங்களின் எண்ணிக்கைக்குமிடையே வேறுபாடு காணப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டு டக்ளஸ் தேவானந்தா குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். கைதான டக்ளஸ் தேவானாந்தா கம்பஹா நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்" என்று ஈ.பி.டி.பி. கட்சி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

(அ-26-44)

## காற்றில்...

இன்றி யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடைநடுவில் கலைந்தது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற, நேற்றைய கூட்டத்தில் ஆளுநரால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று சமர்ப்பிப்புகள் , டித்வா புயல் நிவாரணம், வீட்டுத்திட்டம், நிதியொதுக்கீடுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

**ஓயாத வசவுகள்**

ஆனால் அந்தத் தீர்மாணங்களை எடுப்பதே பெரும்பாடாக இருந்தது. அந்தளவுக்கு எல்லா விடயங்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கிடையே முட்டி மோதினர். குறிப்பாக வழமைபோன்று அர்ச்சுனா எம்.பி., எல்லா விடயங்களிலும் , தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும், உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்களுடனும் தர்க்கப்பட்டார். இதன்போது "பேய்ப் பயல் விசரா!குரங்கு! செம்மறி! மடையன்!, நாய்க்குட்டி!! குடிகாரா!! பொத்தடா! மூடடா!!" என்பன போன்ற சபையில் பேசத்தகாத வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டன.

அதன் பின்னர் தையிட்டி விகாரை தொடர்பான விடயத்தை கஜேந்திரகுமார் எம்.பி. கூட்டத்தில் பேச முற்பட்டபோது, பெரும் குழப்பநிலை தோன்றியது.

**விகாரையை உடைக்கமுடியாது**

அப்போது 'ஒருபோதும் தையிட்டி விகாரையை உடைக்கமுடியாது' என்று ஒரே போடாகப்போட்டார் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன். அதற்கு கஜேந்திரகுமார் எம்.பி. 'ஏன் உடைக்க முடியாது?' என்று திருப்பிக் கேட்க, அமைச்சர் பதில் சொல்ல முடியாமல் மென்று விழுங்கி, சமாளிக்க முயன்றார். இதன்போது பிரதேசசபைகளின் தவிசாளர்கள் எழுந்து, 'தையிட்டி விகாரைப் பிரச்சினை முக்கியமானது. அதற்கு அமைச்சர் பதில் சொல்லட்டும். அதன் பின்னர் உங்கள் பிரச்சினையைப் பார்க்கலாம்" என்று தெரிவித்தனர்.

**வேடிக்கை பார்த்த அமைச்சர்**

உடனேயே அமைச்சருக்குப் பக்கபலமாக சபையில் இருந்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என்ற பேரில் நுழைந்திருந்த தேசிய மக்கள் சக்தியினர் 'தையிட்டியை விட்டு வேறு விடயத்தைப் பேசுங்கள்' என்று கூச்சலிட்டு குழப்பம் விளைவித்தனர். இறுதியில் இந்தக் குழப்பத்தைக் கட்டுப்படுத்த முடியாத கையாலாகாதவராக வேடிக்கை பார்த்தபடி அமைச்சர் சந்திரசேகரன் இருந்த நிலையில், எந்த முடிவுமின்றி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கலைந்தது.

**கலந்துகொண்டோர்**

நேற்றைய ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.றஜீவன், எஸ்.சிறிபவானந்தராஜா, சி.சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அர்ச்சுனா இராமநாதன் , வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சின் செயலாளர்கள், மற்றும் மாகாண, மத்திய அமைச்சின் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பல அரச உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர் (அ-26)

## தெல்லிப்பழை...

துவமனையை மத்திய சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது தொடர்பான சுகாதார அமைச்சரின் கோரிக்கை ஆளுநரால் நேற்றைய கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. நிதிக் கையாளுகை, நிர்வாகச் சிக்கல்கள் போன்ற காரணங்களாலேயே அந்த மருத்துவமனையை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவரும் திட்டம் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

எனினும் மத்திய அரசின் கீழ் தெல்லிப்பழை மருத்துவமனையைக் கொண்டுவரும் திட்டத்தை வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம் முற்றாக நிராகரித்தார். இறுதியில், தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவை தனியான விசேட அலகாக மாற்றி இயங்க வைக்கலாமென கஜேந்திரகுமார் எம்.பி. சிபார்சொன்றை முன்வைத்தார். அது தொடர்பில் யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளரின் ஆலோசனை பெறப்பட்டு, தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இது தவிர, யாழ்.மாவட்டத்தில் இருக்கும் வலிகாமம் கல்வி வலயத்தை இரண்டாக்கி, புதிதாக வட்டுக்கோட்டைக் கல்வி வலயத்தை உருவாக்குவதெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. மேலும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு ஆகியன இணைந்து, மத்திய சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுடன் பெண் நாய்களுக்கான கருத்தடை சிகிச்சையை மேற்கொள்ளும் பொறிமுறைக்கும் நேற்றைய கூட்டத்தில் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

(அ-26)

## எலிக்காய்ச்சல்...

சிங்கம் (வயது-66) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மூன்றுநாட்களுக்கும் மேலாக காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் உடல் நிலைமோசமானதால், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கடந்த வியாழக்கிழமை காலை சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டபோதும், அன்றுமாலையே அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த உயிரிழப்புத் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

சாட்சிகளை நெல்லியடிப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புகள் காரணமாக எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் இருப்பதாகவும் நீர், மற்றும் வயல் வேலைகளில் ஈடுபடுவோர் உள்ளிட்ட பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-100)

## நாளைமுதல்...

இரவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் இந்தோனேசியாவுக்கு மேற்காகப் புதிய காற்றுச் சுழற்சியொன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இது மேற்கு, வடமேற்குத் திசைநோக்கி நகர்ந்து எதிர்வரும் 31 ஆம் திகதி இரவு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவிலுக்குக் கிழக்காக 171 கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டு பின்னர் இலங்கையின் தென்கிழக்குக் கரையை அண்மித்து அதன் பின்னர் இலங்கையின் தெற்கு கரையோரமாக நகர்ந்து எதிர்வரும் ஜனவரி மாதம் 06 ஆம் திகதி குமரிக்கடலைச் சென்றடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், நாளை முதல் அடுத்த வருடம் ஜனவரி 06 ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

வடக்கு, கிழக்கு,மத்திய, ஊவா, வட மத்திய மாகாணங்களுக்குத் தொடர்ச்சியாக நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு அவ்வப்போது மழை கிடைக்கும் என்பதால் குளங்களின் தற்போதைய நீரின் அளவை முன்கூட்டியே சற்றுக் குறைத்து நீர் அளவை முழு வழங்கல் அளவில் பேணாமல் சற்றுக் குறைவாகப் பேணுவது சிறந்தது.

ஜனவரி மாதத்தின் இறுதி வரை பல நாட்கள் மழை நாட்களாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் தைமாதம் 04 ஆம் திகதி வரை மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவா மாகாணங்களின் பல பகுதிகளிலும் நிலச்சரிவு அனர்த்தத்துக்கான சாத்தியங்கள் உள்ளன.

அத்துடன் தொடர்ச்சியாக மழை கிடைக்கும் என்பதனாலும், ஏற்கனவே பல குளங்கள் கிட்டத்தட்ட முழுக் கொள்ளளவோடு உள்ளமையாலும் தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ளம் தொடர்பாக அவதானமாகவிருப்பது அவசியம். இந்தக் காற்றுச் சுழற்சி காரணமாக எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் கிழக்கு, தென்கிழக்கு, வடக்குக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். எனவே மீனவர்கள் கடலுக்குச் செல்வதில் அவதானமாகவிருப்பது அவசியம் -என்றுள்ளது. (அ-66)

## ஆழிப்பேரலை...

5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காணாமற்போயினர்.

இந்தப் பேரிடரின் 21ஆவது நினைவுநாளே நேற்று நாடெங்கும் கடைப்பிடிக்கப்பட்டது. தமிழர் தாயகத்தில் உள்ள சுனாமி நினைவாலயங்களிலும், பொது இடங்களிலும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது சுனாமி ஆழிப் பேரலையின் கோரத்தாண்டவத்தில் உறவுகளை பறிகொடுத்த உறவுகள், 21 ஆண்டுகள் கடந்த நிலையிலும் மாறாத கவலையோடு ஒப்பாரி வைத்து அழுத காட்சி அனைவரையும் நெகிழ வைத்தது. அத்தோடு ஆழிப்பேரலையில் உயிரிழந்தோரின் சடலங்கள் புதைக்கப்பட்ட சமாதிகளுக்கு முன்பாக, அவர்களின் உறவுகள் உணவு படைத்து ஆற்றாத் துயரில் ஓலமிட்டு தமது வேதனையை வெளிப்படுத்தினர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தோரின் ஆன்மசாந்தியை வேண்டி,தேவாலயங்கள் மற்றும் கோவில்களிலும் நேற்று காலை விசேட வழிபாடுகளும் ஆராதனைகளும் இடம்பெற்றன.

(அ-100-27-17-66-56-110-246)

## கிணற்றுக்குள்...

மீட்கப்பட்டவராவார். குறித்த நபருக்கும், அவரது மனைவிக்கும் நேற்றுமுன்தினம் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் மீது பொலிஸில் முறையிடப்போவதாக மனைவி தெரிவித்துள்ளார். அதனையடுத்து வீட்டை விட்டு வெளியே சென்றவர் நேற்றுக்காலை வரை வீடு திரும்பவில்லை. இதனால் அவரைத் தேடியபோது, அயற்காணியில் உள்ள கிணறொன்றில் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

மரணவிசாரணையை வலிகாமம் கிழக்கு திடீர்மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார் (அ-26)

## நீக்கப்பட்டார்...

சபையின் பாதீடு ஒரேயொரு வாக்கு வித்தியாசத்தில் நேற்று வெற்றிபெற்றது. கட்சியின் அறிவுறுத்தலை மீறி, தமிழரசுக் கட்சி உறுப்பினரான லோகேஸ்வரன், பாதீட்டை ஆதரித்து வாக்களித்தமையாலேயே பாதீடு வெற்றிபெற்றது என தமிழரசுக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்தநிலையிலேயே கரைதுறைப்பற்று சபையின் உறுப்பினரும், முன்னாள் தவிசாளருமான சி.லோகேஸ்வரனை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவதாக தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். 'கரைதுறைப்பற்று பிரதேசசபையில் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்குமாறு கடந்த 24.12. 2025 அன்று நீங்கள் பணிக்கப்பட்டிருந்தீர்கள். இந்தப் பணிப்புரைக்கு மாறாக மேற்சொன்ன பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்து கட்சிக் கட்டுப்பாட்டை மீண்டும் ஒருமுறை மீறியதற்காக கட்சி உறுப்புரிமையிலிருந்து இத்தால் நீக்கப்படுகிறீர்கள்' - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-26-66)

## முன்னாள்...

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் புதிய தவிசாளரான இமக்குலேற்றா புஸ்பானந்தன் தலைமையில் நடைபெற்ற நேற்றைய அமர்வில் , ஆழிப்பேரலையில் காவுகொள்ளப்பட்டோருக்கான அகவணக்கத்தைத் தொடர்ந்து, சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு சமர்ப்பிக்கப்பட்டது.

பாதீடு தொடர்பான வாக்கெடுப்பை பகிரங்கமாக நடத்துமாறு சபையின் 21 உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவித்ததையடுத்து, வாக்கெடுப்பு பகிரங்கமாக நடைபெற்றது.

இதில், பாதீட்டுக்கு ஆதரவாக தேசியமக்கள் சக்தியின் 5 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் 2 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒரு உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஒரு உறுப்பினரும், இலங்கைத் தொழிலாளர் கட்சியின் ஒரு உறுப்பினரும், சுயேச்சைக்குழு உறுப்பினருமாக மொத்தம் 11 பேர் வாக்களித்தனர்.

பாதீட்டுக்கு எதிராக தமிழரசுக் கட்சியின் 6 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்தேசியக்கூட்டணியின் 4 உறுப்பினர்களும் என மொத்தமாக 10 பேர் வாக்களித்தனர். இதனால் மேலதிக ஒரு வாக்கால் பாதீடு நிறைவேற்றப்பட்டது. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் தவிசாளரான லோகேஸ்வரன், கட்சியின் முடிவை மீறி பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்ததாலேயே பாதீடு வெற்றி பெற்றது என தமிழரசுக்கட்சியினதும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணியினதும் உறுப்பினர்கள் கூட்டாகக் கருத்து வெளியிட்டனர். ஆயினும் 'பாதீட்டை எதிர்க்குமாறு கட்சி மேலிடம் ஒருபோதும் அறிவுறுத்தவில்லை. இந்தப் பாதீடு நான் தவிசாளராக இருக்கும்போது, சக உறுப்பினர்கள் அனைவரினதும் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டது. அப்படி நானே தயாரித்த பாதீட்டுக்கு எதிராக எப்படி வாக்களிக்க முடியும்? அப்படி வாக்களித்தால் அது மக்களுக்குச் செய்யும் துரோகம்" என்று பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்த தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும், முன்னாள் தவிசாளருமான சி.லோகேஸ்வரன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (அ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன் –மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள்.

**தனுசு:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மகரம்** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.



## புத்தாண்டு வரவேற்பு ஒளிரும் சாவகச்சேரி

யாழ்ப்பாணம், டிசெ.27

புத்தாண்டை வரவேற்கும் முகமாக சாவகச்சேரி நகரம் மின்னொளியினால் அலங்கரிக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் நகராட்சி மன்றத் தவிசாளர், உபதவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் வர்த்தகர்கள் இணைந்து மின்னொளி அலங்காரத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தனர். நகராட்சி மன்றத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ், உபதவிசாளர் ஞா.கிஷோர் ஆகியோரின் எண்ணக்கருவுக்கு அமைய நகரப்பகுதி மின்னொளியால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் முதற்தடவையாக மின்னொளியால் அலங்கரிக்கப்பட்ட சாவகச்சேரி நகரத்தை பொதுமக்கள் பலரும் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர். (ச–28)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.27

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதல் நிகழ்வு எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. (ச–17)



டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளைக் கட்டுப்படுத்தும்வகையில் கிளிநொச்சி மாவட்ட மலேரியாத் தடுப்பு இயக்கம் திருநகர்ப் பகுதியில் அண்மையில் களத்தரிசிப்பில் ஈடுபட்டது. (ச–113)

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

**பரிபூரணம்**

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஜெ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**021 222 2695 / 0774290613**

**வேலையாட்கள் தேவை**

நல்லூர் வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலை செய்வதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் தேவை

தொடர்புகளுக்கு:
**075 894 3735**

**வேலையாட்கள் தேவை**

K.K.S வீதி, கோண்டாவிலில் உள்ள மருதம் Hotel ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- சமையலாளர்கள்
- ரொட்டி போடுபவர்
- உணவு பரிமாறுபவர்

தொடர்பு: **077 747 4498**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மத்தி சமுர்த்தி வீதியில் (வங்கி வீதியில்) 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- தார் றோட் முகப்புடன்
- இரண்டு பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பரம்பரைக் காணி, 1951ம் ஆண்டு உறுதி, தோம்பு யாவும் உண்டு.
- வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலை அமைப்பதற்கும் உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி, செம்மண்தரை, நன்னீரூற்று, அமைதியான சூழல்.
- ஒரு பரப்பின் விலை பதினைந்து இலட்சம் (1500,000/=)

தொடர்பு:- **077 129 4999**
**076 571 0369**

(CS 30936) A

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ் கரவெட்டி, நெல்லியடி சிக்னல் சந்தியில் இருந்து கொடிகாமம் பிரதான வீதியில் 500m தூரத்தில் 18 பரப்புக் காணி இரண்டு பரப்பாக பிரித்துத்தரப்படும். குடியிருப்பு சூழல், நன்னீர் ஊற்று வளங்கள் உண்டு. இந்த காணிகளை மொத்தமாகவும், இரண்டாகவும் பிரித்துத்தரப்படும்.

(CS/60270) J-1

தொடர்புகளுக்கு:-
**077 639 4409, 076 824 7563**

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் 15 நீலப்பரப்பு காணி விற்பனைக்கு**

- ❖ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடிப் பாதையுடன்
- ❖ யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதான வீதியில் அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமையில்
- ❖ அல்லைப்பிட்டி செல்லும் பிரதான வீதி காப்பற் முகப்புடன்
- ❖ அல்லைப்பிட்டி தேவாலயம் 100m தூரம்
- ❖ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் 300m தூரம்
- ❖ அரச தனியார் போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் வீதி.
- ❖ வீடுகள் கட்டுவதற்கும், வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ❖ வீதி முகப்புடன் ஒரு பரப்பின் விலை 1,000,000/=, (பத்து லட்சம்)
- ❖ இரண்டாம் காணி ஒரு பரப்பின் விலை 900,000/=, (ஒன்பது லட்சம்)
- ❖ முன்றாம் காணி ஒரு பரப்பின் விலை 800,000/=, (எட்டு லட்சம்)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்பு: **077 288 0152 / 076 860 2770 / 076 987 8617**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org